DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 323/2024** |
| Deposition of Witness for | : PW 4 |
| Name | : டாக்டர்.கிரண் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 06.02.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 6th February 2026.

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி வீடியோ கான்பரன்சிங் மூலம் ஆஜராகி அளித்த சாட்சிம் பதிவுசெய்யப்பட்டது.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது விருதுநகர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அறுவைசிகிச்சை நிபுணராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.11.2015 அன்று மாலை 5.50 மணியளவில் நான் திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துமவனையில் அவசர சிகிச்சை பிரிவில் உதி வமருத்துவராக பணிபுரிந்தபோது மாரியம்மாள் என்ற 60 வயது பெண் அவரது மகன் குருசாமி என்பவரால் என்னிடம் சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டார். அவரை விசாரித்தபோது அவரை அடையாளம் தெரிந்த ஒரு நபர் கடந்த 23.10.2015 அன்று மகேந்திரவாடியில் வைத்து கல்லால் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்தபோது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன.

1. தலைப்பகுதியில் 3x1 செமீ சிதைந்த காயமும், அந்த காயத்தின் மீது பொறுக்கும் காணப்பட்டது.

அவரை உள்நோயாளியாக அனுமதிக்க பரிந்துரைத்தேன். அவருக்கு தலை மற்றும் நெஞ்சுப்பகுதியில் நுண்கதிர் பரிசோதனை செய்யப்பட்டது. அதில் எலும்பு முறிவு ஒன்றும் காணப்படவில்லை. அதன் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று அளித்தேன். **அந்த காயச்சான்று அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

இருசக்கரவாகனத்தில் காயம்பட்ட நபர் செல்லும்போது கீழே தவறிவிழுவதால் மேற்கண்ட காயம் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. போலீசார் சம்பவத்தில் பயன்படுத்தப்பட்டதாக தெரிவித்து கல் எதையும் காண்பித்து என்னிடம் கருத்துரை பெற்றனரா என்றால் அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை.

**மறுவிசாரணை இல்லை.**